## கடந்த 10 ஆண்டுகளில் 3,544 பேர் இலங்கை சிறையிலடைப்பு!

# தமிழ்நாட்டு மீனவர்கள் கைதை ஒன்றிய அரசு வேடிக்கை பார்ப்பது ஏன்?

## இராமேஸ்வரத்தில் – பல்லாயிரவர் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

இராமேஸ்வரம், பிப்.18

**“கடந்த பத்து ஆண்டுகளில் ஒன்றிய ஆட்சியில் 3544 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் தமிழ்நாட்டு மீனவர்களை ஒன்றிய அரசு வஞ்சிப்பது ஏன்?” என்று இராமேஸ்வரத்தில் பல்லாயிரவர் பங்கேற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பினார்.**

**தமிழ்நாடு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கை அரசை கண்டும் காணாமல் வேடிக்கை பார்க்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நேற்று முன்தினம் (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செய லாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.**

**அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:-**

“இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டத்தை, போராட்டத்தை ஒன்றிய அரசை எதிர்த்து நமது முதலமைச்சர் தளபதி அண்ணன் நடத்தச் சொல்லி இருக்கிறார். இங்கே வந்து உங்களை எல்லாம் சந்திக்கும் போது, மாவட்ட கழக செயலாளர்சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் உங்களோடு ஒருவராக உங்களுக்கு எந்த அளவுக்கு உறுதுணையாக இருக்கிறார் என்று பார்க்கும் போது, நிச்சயமாக இந்த துயருற்ற நேரத்திலும் உங்களுக்கு ஒரு உறுதுணையாக உங்களை தாங்கி பிடிக்கக்கூடிய கரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெருமை சேர்க்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது.

எந்த நேரத்தில் யார் கைது செய்யப்பட்டாலும், யாருக்கு என்ன தேவை என்றாலும், ஓடோடி வந்து மக்களோடு ஒருவராக இருந்து அவர்களின் கண்ணீரை துடைக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினராக நமது முத்துராமலிங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது, நிச்சயமாக உங்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய ஒன்றாக அமையும்.

### தாமரை மலராது!

அதே நேரத்தில் நாம் ஒன்றை மறந்து விடக்கூடாது. கடந்த 10 ஆண்டுகளில் பா.ஜ.க. ஒன்றியத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு ஏறத்தாழ 3544 மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் மறைந்த அம்மையார் சுஷ்மா சுவராஜ் தலைமையில், தமிழ்நாட்டிலேயே தாமரை மலராது, ஆனால் கடலில் தாமரை மலரும் என்று சொல்லி கடல் தாமரை என்ற ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். அந்தப் போராட்டத்திற்குப் பிறகு தாமரையையும் காணவில்லை அவர்களையும் காணவில்லை.

எந்தப் பிரச்சினை வந்தாலும் அதற்கு ஒன்றிய அரசாங்கம் செவி சாய்ப்பதே இல்லை. நானும் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி அவர்களும் பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

இங்கே இருக்கக்கூடிய பிரச்சினைகள், எத்தனை முறை நம்முடைய மீனவர்கள் சிறை பிடிக்கப்படுகிறார்கள், சிறைபிடிக்கப்படுவது மட்டுமல்லாமல் இலங்கையிலே அவர்களின் படகுகள் தேசிய மயமாக்கப்படும் என சட்டம் இயற்றப்பட்டு, இன்று 200 படகுகள் மேல் அங்கே சிறைபிடிக்கப்பட்டு நமக்கு திருப்பி தராமல் வைத்திருக்கிறார்கள்.

இந்த வருடத்தில் கணக்கெடுத்து பார்த்தால் இன்று வரை தமிழ்நாட்டைச் சேர்ந்த 97 மீனவர்கள் இலங்கை சிறையில் இருக்கிறார்கள். இந்த வருடத்தில் ஒரு நாளைக்கு இரண்டு மீனவர்கள் வீதம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். என்ன செய்து கொண்டிருக்கிறது ஒன்றிய அரசாங்கம்?

### எத்தனை முறை பேச்சுவார்த்தை நடைபெற்றது?

ஒவ்வொரு முறையும் நாங்கள் இந்த பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பும் போது எந்த பதிலும் சொல்லப்படுவதில்லை. எந்த அக்கறையும் காட்டப்படுவதில்லை. தொடர்ந்து நம்முடைய மீனவர்களும் நம்முடைய முதலமைச்சரும் வைக்கக்கூடிய கோரிக்கை, இரண்டுநாட்டுமீனவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்பதுதான். ஆனால் எத்தனை முறை பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள்? எனக்குத் தெரிந்து கிடையாது. மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையை நடத்தாமல், அதிகாரிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை 2022 மார்ச் மாதம் நடைபெற்றது.

அதன் பிறகும் நம்முடைய மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டபோது நான், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர், மீன்வளத்துறை அமைச்சர் ஆகியோர் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தோம். அவரிடமும் இதே கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினோம். அவரும் இந்த கூட்டத்தை நடத்துவேன் என சொல்லி, அதிகாரிகளுக்கு இடையிலான கூட்டத்தை தான் நடத்தியிருக்கிறார். அதுவும் இரண்டரை வருடம் கழித்து. இதுவரைக்கும் மீனவர்களுக்கு இடையிலான அந்தக் கூட்டம் நடைபெறவே இல்லை.

ஆனால் நம்முடைய முதலமைச்சர் ஒவ்வொரு முறை பிரதமரை சந்திக்கும் போதும் மீனவர்கள் பிரச்சனையை எழுப்ப தவறியதே இல்லை. பிரதமர் இங்கே வரும்போதும், நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி டெல்லி செல்லும் போதும் தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்பது தான் நாம் வைத்துக் கொண்டிருக்கிற கோரிக்கை.

ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு இதை ஏதோ இரண்டு நாடுகளுக்கு இடையிலான தீர்க்கவே முடியாத பிரச்சினையைப் போல, அவர்கள் கருத்துக்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

### நார்வே – ரஷ்யா அமைதியாக மீன் பிடிப்பு!

நான் கேட்கிறேன், நார்வே – ரஷ்யா இரண்டு நாடுகளுக்கு இடையே Barents Sea எனப்படும் ஒரு சிறிய கடல் பகுதி தான் இருக்கிறது. அங்கே இரண்டு நாட்டு மீனவர்களும் எந்த பிரச்சினையும் இல்லாமல் மீன் பிடிக்கிறார்கள். அவர்களுக்கு இடையிலும் பிரச்சினை இருந்தது. ஆனால் இரண்டு நாடுகளும் மீனவர்களின் ஆலோசனையின் படி அங்கு இருக்கக்கூடிய பிரச்சினைக்கு தீர்வு கண்டு இன்று அவர்கள் அமைதியாக எந்த பிரச்சினையும் இல்லாமல், யாரும் கைது செய்யப்படாமல், யாருக்கும் எந்த கஷ்டமும் இல்லாமல் அவர்கள் அங்கே மீன்பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல ஆஸ்திரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலே இருக்கக் கூடிய கடல் பகுதியிலே இரண்டு நாட்டு மீனவர்களும் அமைதியாக மீன்பிடித்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு நாடுகளும் தலையிட்டு பிரச்சினைகளை சரி செய்து அந்த மீனவர்களுக்கு பாதுகாப்பை உருவாக்கித் தந்திருக்கின்றன.

இதேபோல் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையிலே இருக்கக்கூடிய கடல் பகுதியிலே பொதுவாகவே பிரச்சினைகளை கொண்டிருக்கக் கூடிய நாடுகளின் மீனவர்களும் பிரச்சினை இல்லாமல் மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஐஸ்லாந்து – கிரீன் லேண்ட் நாடுகளுக்கு இடையே இருக்கக்கூடிய கடல் பகுதியில் மீனவர்கள் எந்த பிரச்சினையும் இல்லாமல் மீன் பிடிக்க வேண்டும் என்று அந்த நாடுகள் கருதியதால் மீனவர்கள் இப்போது மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி பல நாடுகளுக்கு இடையில் தீர்க்கப்பட்டு இருக்கிற பிரச்சினை தான் இது. ஏதோ தீர்க்க முடியாத பிரச்சினையை தீர்த்துக் கொடுக்குமாறு நாம் கேட்கவில்லை.

எத்தனையோ நாடுகளில் மீனவர்கள் கடல் எல்லை பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளை எல்லாம் தாண்டி நிம்மதியாக, அமைதியாக, எந்தவித பாதிப்பும் இல்லாமல் அச்சுறுத்தல் இல்லாமல் மீன்பிடி தொழிலை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை, அந்த பாதுகாப்பை. அந்த அமைதியை அந்த நிரந்தர தீர்வைதான் நாம் எதிர்பார்க்கிறோம்.

### டெல்லியில் ஆர்ப்பாட்டம்!

ஆனால் ஒன்றிய அரசாங்கம் திரும்பத் திரும்ப இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர் என அனைவரும் குரல் எழுப்பிய பிறகும் தீர்வு காண மறுக்கிறது.

சமீபத்தில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடந்த போது எங்களது தமிழ்நாட்டு மீனவர்களை காப்பாற்றுங்கள் என்று கோரிக்கை வைத்து ஆர்ப்பாட்டத்தை நடத்தி இருக்கிறோம். இந்த ஆர்ப்பாட்டத்தில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல கேரள எம்.பி.க்கள், திரிணாமூல் காங்கிரஸ் கட்சி எம்.பி.க்கள் என்று இந்தியாவிலே இருக்கக் கூடிய பல்வேறு பகுதிகளை சேர்ந்த எம்.பி.க்கள் நம்முடைய துயரத்தை, வலியை, மீனவர்கள் படக்கூடிய கஷ்டங்களை உணர்ந்து கொண்டு நம்மோடு சேர்ந்து வந்து குரல் எழுப்பினார்கள். வராதது அ.தி.மு.க., பி.ஜே.பி.தான். அப்படி என்றால் எந்த அளவுக்கு அவர்களுக்கு உங்கள் மீது அக்கறை இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

10 வருடம் முன்பு, ‘இனி எந்த தமிழ்நாட்டு மீனவர்களும் கைது செய்யப்பட மாட்டார்கள். துன்புறுத்தலோ அச்சுறுத்தலோ இருக்காது. படகுகள் பாதுகாக்கப்படும்’ என்று வாக்கு வங்கி அரசியல் செய்தவர்கள் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள். இன்று எங்கே போனார்கள்?

இன்று நம்முடைய மீனவர்கள் கைது செய்யப்படுகிறார்கள், கைதோடு நிற்பதில்லை. அங்கே அவர்கள் என்னென்ன அவமானங்கள் கஷ்டங்களை சந்திக்கிறார்கள் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

### சகோதரர்களுக்கு கைவிலங்கு!

அப்படிப்பட்ட நிலையில் ஒரு நாட்டின் தன்மானம் சுயமரியாதையை காப்பாற்றக் கூட ஒரு அரசாங்கம் முன்வரவில்லை என்றால், இதே நிலைமைதான் அமெரிக்காவிலிருந்து திருப்பி அனுப்பப்படக்கூடிய சகோதரர்களுக்கு கைகளிலே விலங்கிடப்படுகிறது.

அதைப்பற்றி ஏதாவது கேட்டிருக்கிறாரா பிரதமர்? இதைப் பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டபோது அதற்கு பதில் அளிக்க துணியாத ஆட்சிதான் இன்றைய பா.ஜ.க. ஆட்சி.

### பத்திரிகை சுதந்திரம் முடக்கப்படுகிறது!

இதைப்பற்றி ஒரு பத்திரிக்கை கேள்வி கேட்டால் சித்திரம் தீட்டினால், அவர்கள் முடக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த பதில் இதுதான். கேள்வி கேட்டவனை அழித்துவிடு.

ஆனால் கேள்விக்கான எந்த பதிலையும் ஒன்றியத்திலே இருக்கக்கூடிய பிஜேபி அரசாங்கம் இதுவரைக்கும் இந்த நாட்டில் எந்த கேள்விக்கும் சொல்லத் தயாராக இல்லை. எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு காண அவர்கள் தயாராக இல்லை.

### ஒன்றியத்தில் நடப்பது ஆட்சியா?

நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டபோது, எனக்கு வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து முதலமைச்சராக பணியாற்றுவேன் என்று கூறினார். ஒவ்வொரு பகுதியிலும் முதலமைச்சர் ஆய்வுகளுக்காக போகும்போது, சாலையோரத்தில் மக்களை பார்க்கும்போது அவர்களை பார்க்கப் போகிறார். அவர்களிடம் மனுக்களை பெறுகிறார். அவர்கள் கோரிக்கைகளை வைக்கிறார்கள். நீங்கள் எந்த கட்சி என்று ஒரு முறை கேட்டிருப்பாரா? இல்லை. இந்தத் இந்தத் தொகுதியில் நாம் ஜெயித்து இருக்கிறோமா என்று சிந்தித்து இருக்கிறாரா?

ஆனால் நீங்கள் ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கும் போது உங்களிடம் கேட்கக் கூடியது, எங்களுக்கு நீங்கள் ஏன் வாக்களிக்கவில்லை? உங்களுக்கு ஏன் நாங்கள் உதவி செய்ய வேண்டும்? இதெல்லாம் ஒரு ஆட்சியா? இவர்களெல்லாம் மக்கள் பிரதிநிதிகளா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்டவர்களுக்கு நிச்சயமாக விரைவிலே நம்முடைய போராட்டம் நம்முடைய குரல் நம்முடைய எதிர்ப்பு ஓயாது என்பதை புரிய வைக்கக்கூடிய மிகப்பெரிய போராட்டமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடத்திக் காட்டி இருக்கிறார்.

இதற்குமேல் போராட வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலையோடு முடிய வேண்டும். அப்படி இல்லை என்றால், இந்தப் போராட்டம் டெல்லியிலும் தொடரும் என்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### முதலமைச்சருடன் விரைவில் சந்திப்பு!

இங்கு இருக்கக்கூடிய மீனவர் சங்கங்களை சேர்ந்த சகோதர சகோதரிகளை நேற்று முன்தினம் இரவு நான் சந்தித்தபோது, உங்களுடைய கோரிக்கை விரைவில் முதலமைச்சரை சந்திக்க வேண்டும் என்பது. நீங்கள் கோரிக்க வைக்கும் முன்பாகவே உங்களை சந்திக்கக்கூடிய முதலமைச்சர் தான் நம்முடைய முதலமைச்சர்.

சென்ற மாநாடு இங்கே தான் நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட ஆயிரம் கோடிக்கும் மேலான திட்டங்களை அந்த மேடையிலேயே அறிவித்த முதலமைச்சர் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள்.

அதனால் மிக விரைவில் உங்களையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் சந்திக்க இருக்கிறார். உங்களுடைய கோரிக்கைகளை கேட்க இருக்கிறார்கள். விரைவிலே உங்கள் வலிகளுக்கு இந்த துன்பங்களுக்கு தீர்வை காண்போம் நன்றி.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், மீனவ சங்க பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கை அரசை கண்டும் காணாமல் வேடிக்கை பார்க்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நேற்று முன்தினம் (16.02.2025 – ஞாயிற்றுக்கிழமை), இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். உடன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், மீனவ சங்கப் பிரதிநிதிகள் என தமிழ்நாடு மீனவர்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர்.